தனிப்பிரதி – ரூ. 20/-
ஆண்டு சந்தா– ரூ. 200/-

# முத்தமிழ் நேசன்


ஆகஸ்ட்
மலர் 1 இதழ் 7
இனிக்கும் இலக்கிய இதழ்



## தூத்துக்குடியைத் தெறிக்கவிட்ட கனிமொழி!

## சென்னையைக் கலக்கிய சர்வதேச செஸ் ஒலிம்பியாட் 2022




ஓரே முறையாவது
உனது அன்பினைக்
காட்டு
ஓராயிரம் முறை
மரித்து
உயிர்த்தெழுவேன்.
தாழை இரா.உதயநேசன்

# முத்தமிழ் நேசன்

**இனிக்கும் இலக்கிய இதழ்**

**ஆகஸ்ட் 2022 மலர் 1 இதழ் 7**

**நிறுவனர்**

**தாழை இரா.உதயநேசன்**

**ஆசிரியர்**

த.அமுதா

**ஆசிரியர் குழு**

முனைவர்
ஜோ.சம்பத்குமார்
கவிஞர் செ.வீரமணி
த.ஓவியா

**வடிவமைப்பு**

ம.சேவியர்

**அச்சு**

M.S ஆப்செட் ராயப்பேட்டை



**அலுவலக முகவரி**

முத்தமிழ் நேசன்
எண்:10, முதல் தெரு,ஸ்ரீராமபுரம்
ஆம்பூர் – 635 802
திருப்பத்தூர் மாவட்டம்


**தலையங்கம்**

# பயமுறுத்தும் கல்வி நிறுவனக்கள்

வணிகமயமாகிவிட்டது கல்வித்துறை. அன்போடும் அக்கறையோடும் கல்வி போதிக்க வேண்டிய கல்வி நிறுவனங்கள், கார்பரேட் நிறுவனங்கள் போல மாறிவிட்டன. அவை ஈவு இரக்கமின்றிப் பணம் கொழிக்கும் நோக்கில் செயல்படுகின்றன. அதனால் அவை மாணவ மாணவிகளின் எதிர்காலத்தின் மீதோ, அவர்களின் வளர்ச்சி, உயர்வு பற்றியோ அக்கறை செலுத்துவதில்லை. இது பெரும் கவலையை ஏற்படுத்துகிறது.

அதிலும் கல்வி நிறுவனங்கள், குற்றவாளிகளின் கூடாரமாகவும், அவர்களின் வேட்டைக்காடாகவும் மாறிவருவதும் பயத்தை ஏற்படுத்துகிறது.

கள்ளக்குறிச்சி மாணவி ஸ்ரீமதி, தற்கொலை செய்துகொண்டாரா? இல்லை கொல்லப்பட்டாரா? என்பதை புலனாய்வு அமைப்புகள் தெளிவுபடுத்தும் வரை, மக்களின் அச்சம் நீங்காது.

கல்வி நிறுவனக்களிலேயே பெண் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்றால், இதை நாடு என்று சொல்லிக்கொள்வதில் எந்தப் பொருளுமில்லை.

**த.அமுதா**

இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள்,

யுனிகோட் ( unicode ) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.

படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

mutamilnesan2022@gmail.com





# அணிவகுத்த கவிஞர்கள்! அரங்கேறிய ஹைக்கூக்கள்!

# தமிழ் ஹைக்கூ உலக மாநாடு 2022

திருச்சி தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் கடந்த ஜூலை 17 அன்று தமிழ் ஹைக்கூ உலக மாநாடு – 2022 சிறப்பாக நடைபெற்றது. இந்த மாநாட்டை தூண்டில் – இனிய நந்தவனம் – தமிழ் கவிதையாளர்கள் இயக்கம் ஆகியவை இணைந்து நடத்தின.

இம்மாநாட்டை கல்வியாளர் சௌமா ராஜரத்தினம் தொடங்கி வைத்தார். காலை 10 மணிக்குத் தொடங்கி, ஒன்பது அமர்வுகளாக நடைபெற்றன. இதில், தமிழகம், இந்தியாவின் பிற மாநிலங்கள்





மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் 150–க்கும் மேற்பட்ட ஹைக்கூ கவிஞர்கள், ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

ஹைக்கூ வாசிப்பரங்கம், கருத்தரங்கம், பகிர்வரங்கம், கலந்துரையாடல், கவிக்கோ நினைவு ஹைக்கூ விருது வழங்குதல், ஹைக்கூ நூல்கள் வெளியீடு ஆகியன நடைபெற்றன. இம்மாநாட்டில் திரைப்பட இயக்குநரும் கவிஞருமான என்.லிங்குசாமி, பிருந்தாசாரதி, ஓவியக்கவிஞர் அமுதபாரதி, ஆரூர் தமிழ்நாடன், தங்கம்மூர்த்தி, மு.முருகேஷ், நந்தவனம் சந்திரசேகரன், அமரன், வதிலை பிரபா, பல்லவி குமார், கவிநிலா மோகன், முனைவர் ம.ரமேஷ், தனலெட்சுமி பாஸ்கரன், பா.தென்றல்





ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று உரையாற்றினர்.

மாநாட்டு நிறையுரையாக கவிஞர் என்.லிங்குசாமி பேசுகையில், “ஹைக்கூ கவிதை எழுதுபவனின் மனநிலையானது உலகில் இருக்கும் எல்லா மனிதர்களின் மனநிலையிலிருந்தும் வேறுபட்டிருக்கும்.

அவர்கள் இந்த உலகத்தைப் பார்க்கின்ற பார்வையும் மற்றவர்கள் மீது காட்டுகின்ற அன்பும் மகிழ்ச்சியும் வித்தியாசமாக இருக்கும். சென்னைக்குப் போனால் பிழைத்துக் கொள்ளலாம் என்ற உந்துதலை எனக்குத் தந்தது மூன்று வரி ஹைக்கூ கவிதைதான்.



என்னை இந்த உயரத்திற்கு உயர்த்தியதும் எனது வெற்றி தோல்வியில் மனதைச் சமநிலையில் வைத்துக் கொள்வதும் இந்த ஹைக்கூ கவிதைகள் தான். ஹைக்கூ கவிதை எழுத மெனக்கெடக் கூடாது.

அது இயல்பாக அமைய வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

மாநாட்டில் ‘தூண்டில்’ ஹைக்கூ சிறப்பு மலர், மு.முருகேஷ் எழுதிய ‘ஞானியின் பச்சைக்கிளி’, கவி.விஜய் எழுதிய ’காலளவு வானம்’, ’இலை வடிவில் வெயில்’, தங்கம்மூர்த்தியின் ‘மழையின் கையெழுத்து’ உள்ளிட்ட பல ஹைக்கூ கவிதை நூல்கள் வெளியிடப்பட்டன.

தமிழக அரசு ஆண்டுதோறும் வழங்கும் இலக்கிய விருதுகளில் கவிக்கோ அப்துல் ரகுமான் பெயரால் ஹைக்கூ கவிஞர்களுக்கும் ஒரு விருதினை வழங்கிட வேண்டும் என்ற தீர்மானமும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

**– முகேஷ்**

# கவிதை



## ஒத்தக் கண்ணால் உசுப்புரியே

ஒத்தக் கண்ணால் உசுப்புரியே
ஓரக் கண்ணால பாக்குறியே
ஓடி வந்தா முறக்கிறியே
ஒய்யாரமாத் தலை சாக்கிறியே
ஒளிஞ்சு நின்னு கேக்குறியே
ஒத்தையாத் தவிக்க விடுறியே
ஒத்தக் கல்லு மூக்குத்தி
ஒளியால கண்ணக் கூசுறியே
ஒருதலக் காதலால உருகுறது
ஒன்னோட மனசுக்கு எட்டலயா?
ஒருவன் இங்கு துடிக்கிறேன்.
ஒன்னுமே தெரியாம நடிக்கிறியா?



## நிலவின் நிழல் நீயே

தென்றல் காற்று வீசிட
தேகமெல்லாம் சிலிர்த்திட
பனிமலையாய்ப் படர்ந்திட
பரவசம் தந்தவளே

செந்தமிழே என்னுயிரே
செந்தேனாய் இனிப்பவளே!
கன்னல் மொழியால்
கவிதையாகப் பேசுபவளே

கானல் நீராய்த் தோன்றிக்
கண்ணில் மறைபவளே
எண்ணத்தில் உதிர்த்தாயே
எழிலான வடிவழகே

கந்தையிலும் காணக்
கண்கோடி வேண்டுமே
உந்தன் புன்னகையால்
உள்ளம் மகிழுதே
விந்தை கொள்ளுதே வியப்பில்

**–முத்தமிழ்ச்செல்வி**

# என் நெனப்பெல்லாம் நீதானே



கிராமத்து ஆம்பளைங்க
பட்டிக்காடுனு நெனச்சிருந்தேன்
பொய்யாகிப் போனதையா
ஒன்னப்பாத்த நாள்மொதலா.

கட்டிளங் காளைநீயும்
வேட்டிக்கட்டி நடக்கயிலே
உம்மோடு வருகுதையா
ஏ மனசும் கைகோத்து.

குலசாமிக் குளக்கட்டில்
வழுக்கிவிழப் பாத்தவள
கைப்பிடிச்சித் தூக்கிவிட்ட
மீசையத்தா முறுக்கிக்கிட்டு.

கற்பனைக் கரிகாலன்
ஏங்கண்ணெதிரே தெரிஞ்சான்ய்யா
ஓம் மன்மதச் சிரிப்புக்கு
மாயக்கண்ணனும் தோத்துடுவான்

நானாக நானில்ல
என் நெனப்பெல்லாம் நீதானே
களவுபோன ஏமனசுக்கு
சொந்தக்காரன் நீதான்ய்யா!

**லக்ஷ்மி பகீரதன்,**
**பிரித்தானியா**

# களவு போன ஏமனசு

கம்மாக் கரையோரம்
சும்மாதான் நடக்கையிலே
சுத்தி சுத்தி வந்த மச்சான்
சொக்க வைச்சான் எம் மனசை

பாதையில நடக்குறப்ப
கல்லும் முள்ளும் குத்தாம
பார்வையில பூவிரிச்சு
பாத்துக்கிட்டான் பத்திரமா.

அல்லி மலரும் அந்தியிலே
ஆசைகள சொமந்துவந்தான்
அன்பையும் தந்தானே
சொந்தமாக கண்டானே

கண்ணாலப் பேசிப் பேசி
கற்பனைய வளத்தானே
களவுபோன எம்மனசை
திரும்பித்தர மறுத்தானே

**மு.அ.செல்வராஜ்**

# செவத்த இலை

## நூலாய்வு

முனைவர் **பாரதிசந்திரன்**






**தாழை இரா உதயநேசன்** எழுதிய சிறுகதைத் தொகுப்பு இந்நூல். இந்நூலில் 30 சிறுகதைகள் காணப்படுகின்றன. சிறுகதைக்கே உரித்தான அடித்தளக் கட்டமைப்பைப் பெற்று, மன உணர்வுகளைத் தெளிவாக வெளிப்படுத்தும் மற்றும் சிந்தனைகளுக்கு வழிவகுக்கும் சிறுகதைகள் இத்தொகுப்பில் காணப்படுகின்றன.

குறிப்பாகச் சிறுகதைகள், அந்த அந்தக் காலகட்டத்தின் சமூக நடப்புகளை வெளிப்படுத்துகின்றனவாக அமைய வேண்டும். தனிமனித உள்ளத்தின் உணர்வுச் சிந்தனைகளை வெளிப்படுத்த வேண்டும். சிறுகதைகளைப் படிப்பவர்கள், ஆசிரியர்கூற வந்திருக்கும் செய்தியை, கருத்தை, அறிவுரையை, நடப்பை மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டாலே சிறுகதை வெற்றி பெற்று விட்டதாகப் பொருளாகும்.

அந்த நிலையில் 30 சிறுகதைகளில் ஆசிரியர் என்ன கூற நினைத்தாரோ அந்தக் கருத்தும்,நடத்தைகளும், அறிவுரைகளும் மிகத் தெளிவாகவாசகனுக்குப் போய்ச் சென்றடைந்து இருக்கிறது.

எந்தவிதமான மிகைச் சொல்லாடல்களும் இந்தச் சிறுகதைத் தொகுப்பில் எங்கும் காணப்படவில்லை. வசன உரைநடைகள், ஆசிரியரின் உள்ளீடுகள்,காட்சிப் பின்புல விளக்கம், இவைகள் அனைத்தும் வெற்றுச்

சதைகளைச் செதுக்கி மிகச் சரியான உடல் அமைப்பில் ஒரு உருவத்தைச் சமைத்துத் தந்திருக்கிறது.

ஒரு சிறுகதையைப் படித்து முடித்தவுடன் அந்தச் சிறுகதை படித்தவரின் மனதில் ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்று கூறுவார்கள்.

இத்தொகுப்பிலுள்ள 30 கதைகளும் படித்து முடித்தவுடன் 30 விதமான எண்ணக் கிளறல்களை ஏற்படுத்துகின்றன. அந்தக் கிளர்ச்சிகள் வாசகனை ஆசிரியரின் எல்லைக்கு அருகில் கொண்டு சென்று, ஆசிரியரையே தரிசிக்க வைக்கின்றன. உண்மையில் எல்லாச்சிறுகதைகளும் உணர்வு மேலிடல்களின் முத்தாய்ப்பாய் அமைந்திருக்கின்றன.

உளவியல் பூர்வமான பல உள்ள வெளிப்பாடுகள், மனதின் அகோர எண்ணங்கள், பாச உணர்வுகள், குற்ற உணர்வுகள், தெளிவற்ற நிலை, பாசாங்கு, போலித்துவம் போன்ற பல உளவியல் தாக்கங்களை, இந்தச் சிறுகதைகள் விளக்கி நிற்கின்றன. ஒட்டு மொத்தமாய் உளவியல் சார்ந்து இருக்கின்ற மிக ஆழமான சிறுகதை தொகுப்பு இதுவாக இருக்கலாம். உளவியல் பூர்வமான படைப்புகளைக்குறித்து டாக்டர் தி.சு. நடராஜன் அவர்கள் கூறுகிற பொழுது, சமூக ஒழுக்கம் முதலியவற்றின்காரணமாக மன உணர்வுகள் சுதந்திரமாக வெளிப்படாமல் அழுத்தப்படுகின்றன. இவ்உணர்வுகளும்அடி மனதில் ஆழமாய் மையம் கொண்டிருக்கும் பாலியல் உணர்வுகளும் நனவிலி மனத்தின் ஊடாக, அவனே அறியாத நிலையில், அவனுடைய சொல்லிலும், செயலிலும் வெளிப்படுத்தப்படுகின்றன.

கலைஞனிடம் இத்தகைய உணர்வுகள் அவனுடைய அறிவார்ந்த விருப்பங்களையும், உணர்வுகளையும் மீறி அவனுடையகலை படைப்பில் வெளிப்பட்டு விடுகின்றன. என்று கூறுவார்.

இந்தக் கோட்பாடு முழுமையும் இந்தச்சிறுகதைத் தொகுப்பின் ஊடாக ஒப்பிட்டுப் பார்க்கலாம். மிகச் சரியாகப் பொருந்தி வரும்.மனிதன் ஒரு சமூக விலங்கு என்பர்.அவனிடம் சமயத்திற்குத் தகுந்த பல்வேறு உணர்வுகள் வெளிப்படும். அந்த உணர்வுகளை, அந்தக்கணம் எப்படி உணர்ந்ததோ அதே உணர்வோடு அந்தக் காட்சியை வெளிப்படுத்த சிறுகதைகள் முனைந்திருக்கின்றன.

அந்த முனைப்பை தாழை.இரா. உதயநேசன் அவர்கள் செய்திருக்கின்றார்.

உதாரணத்திற்குச் 'செவத்த இலை' என்று ஒரு கதை. இதில், 'பச்சம்மா' எனும் கதாபாத்திரம்.

எதார்த்தமான வாழ்வியல் சூழலில், எளிமையான,ஏழ்மையான வாழ்க்கை வாழும் ஒரு கிராமத்துப் பெண்மணி.

அவளுக்கு ஏற்படும் இன்னல்கள் வாழ்வாதாரச் சிக்கல்கள், அரசு அதிகாரிகள் செய்யும் அட்டூழியங்கள், இதை மீறிய பாலியல் உணர்வுகள் போன்ற அனைத்துக் காரணிகளையும் மையம் கொண்டு இச்சிறுகதைகள் நடை

போடுகின்றன.

சிறிய கதை தான் இது. ஆனால், சமூகப்பிரச்சனைகள் முழுவதும் பேசப்படுகின்றன. ஒரே ஒரு வார்த்தை ஒரு பிரளயத்தின்வார்த்தையாகவும்இருக்கலாம். ஆயிரம் வார்த்தைகள் வெற்று வார்த்தைகளாகவும் இருக்கலாம். இச்சிறுகதையினுடைய காலம் குறுகியதுஆனால், அடிமை வரலாறு நீண்டகாலமுடையது. ஒவ்வொரு வார்த்தைகளும் சமூகப் பிரச்சனைகளை வெகுண்டுபேசுகின்றன. பச்சம்மா, ஆடு மேய்க்கும் குடும்பத்தைச் சார்ந்தவள். இவள் கணவன் ஆடு மேய்த்துத்திரும்பாமல் இருக்கிற பொழுது, அந்த ஊர் காரர் அவருக்கு நேர்ந்த கொடுமையைப் பச்சம்மாவிடம்கூறுகிறார். ஒரு கிராமத்துப் பெண்மணி எதற்கும்துணிந்தவளாக அரசு அதிகாரியின் அலுவலகம் தேடிச் செல்லுகிறாள். அங்கு அவளுக்கு அநீதிஇழைக்கப்படுகிறது.

லஞ்சம் கேட்கப்படுகிறது. இவளின் அழகிய மேனி கேட்கப்படுகிறது. வெகுண்டுஎழுந்த அந்தக் கிராமத்து பெண்மணி, தன் ஆடுகளுக்கு இலை பறித்துப் போடும் துரட்டியால்அந்த அரசு அதிகாரியின் கழுத்தை அறுத்து கீழே போட்டு விடுகிறார். அதிகாரியிடமிருந்து வழிந்த ரத்தம்காய்ந்து சறுகாய் கிடந்த இலைகளைச் சிவப்பாக மாற்றுகிறது. இதுவே கதையின் தலைப்பாகவும்மாறுகிறது. இந்த இடம் உச்சகட்டமான சிறுகதையின் மையப் புள்ளியாகயிருக்கிறது. இந்த இடத்தில் அரசு அதிகாரியின்அநீதி தண்டிக்கப்படுவது ஒரு பெண்ணால். தன்னை இழந்து விடாமல் காப்பாற்றிக்கொள்வது, தன்கணவனுக்கு நேர்ந்த அநீதியைத் தட்டிக் கேட்பது, போன்ற பல புரட்சிகரமான வெளிப்பாடுகள்இக்கதை மூலம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றன. ஏலகிரி மலையின் அடிவாரம் நம் கண் முன்விரிகின்றது.

கிராமத்திய வாழ்வியலும், கிராமத்துப் பேச்சு நடையும், பச்சம்மாவின் ஏக்கமும்,ஆடுகளின் தவிப்பும், இந்தக் கதையின் வழியாகப் படிப்பவர் மனதை வாட்டி வதைக்கின்றன. குடியினால் வேதனைப்படும் ஒருஏழைக் குடும்பத்தின் சமூகச் சூழல், வாழ்வியலைப் பெண் கடத்திச் செல்லும் பாங்கும், திருமணமாகிக்குழந்தை இல்லாமல் தவிக்கும் ஒரு பெண்ணின் மன வேதனையும், அதற்கான தீர்வுகளும், மண்பாண்டங்களைவிற்று வரும் ஒரு பெண்ணின் இயலாமை, அந்த மண்பாண்டங்கள் அனைத்தும் விபத்தில் இழந்துவிட அவள் தவிக்கும் தவிப்பு, விவசாயிகளின் அன்றாடம் சந்திக்கின்ற பிரச்சனைகள் அரசுஅதிகாரங்களும் நாட்டாமை போன்ற அதிகார வர்க்கங்களும் ஏழைகளையும் சமூக அந்தஸ்தில் குறைந்தவர்களையும்படுத்தும் பாடு. அதன் உக்கிரமான மன ஓட்டங்கள் இவை அனைத்தையும் அதன் மையப் புள்ளியைப்பிடித்துப் பார்த்தும் இக்கதைகளின் ஊடாக வெளிப்படுத்தி உள்ளார் ஆசிரியர்.

இதற்கான கதைக்கருவை அவர் எங்கெல்லாம் தேடினார், இதற்காக அவருடைய தேடல் மிகப்பெரியதாக இருக்கின்றது, சமூகத்தில் பணக்காரர்களின் மகிழ்ச்சிகளையும், சந்தோசங்களையும் இலக்கியங்கள் பேசுவதை விடுத்து, பாமர மக்களின் இன்னல்களை என்று இலக்கியம்பேசுகிறதோ அன்று அந்தச் சமூகம் மேல்நிலை அடையும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அதன்படி இவ்விலக்கியம் தாழை இரா. உதயநேசன் அவர்களின் இந்தச் சிறுகதை இலக்கியம் முற்றிலுமாகமனம் சார்ந்த மன ஓட்டங்களை வெளிப்படுத்தியுள்ளது.

இதன்மூலம்சமூகம்முன்னேற்றமடையும். சிறந்த சமூகச் சிந்தனையுள்ள சிறுகதைகள்.

## நூல் குறிப்பு:

**நூலின் பெயர் : செவத்த இலை. நூல் ஆசிரியர் : தாழை இரா.உதயநேசன் பக்கம் : 112 நூல் கிடைக்குமிடம் : கலை உதயம் பதிப்பகம் 10, முதல் தெரு, ஸ்ரீராமபுரம் ஆம்பூர் 635802. திருப்பத்தூர் மாவட்டம்.விலை : 100**


---

நம் நேற்றைய
சந்திப்பில்
என் நாளைகளையெல்லாம்
எடுத்துச் சென்றுவிட்டாய்

ஒரு பயணத்தில்
எதிர்பாராத விதமாக
காட்டையும் கடலையும்
ஒரே இடத்தில் சந்திக்க நேர்ந்தது
இங்கு நான் யாரிடம்
காதலை சொல்வேன்
என்னிடம் தவிர.

எல்லாக் கடனையும்
அடைத்துவிட்டேன்
நண்பன் ஒருவன்
எனக்காக சிந்திய
கண்ணீருக்கு மட்டும்
வட்டி ஏறிக்கொண்டே போகிறது

**– நாடன் சூர்யா**



# மாமனிதர் காமராசரை மறவோம்!

ஆடம்பர அரசியல், கார்ப்பரேட் அரசியல்வாதிகள், முகமூடி அணிந்த ஜனநாயகவாதிகள் என்று இன்று நாம் நிறையபேரைப் பார்த்துவருகிறோம். இந்த நேரத்தில் மக்களின் நலனே முக்கியம் என்று நினைத்து வாழ்ந்தவர்களை நினைக்கும் போது ஏக்கம் ததும்புகிறது.

அத்தகைய உன்னதத் தலைவர்களின் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவர் பெருந்தலைவர் காமராசர் ஆவார்..

“தமிழன் என்றோர் இனமுண்டு

தனியே அவனுக்கோர் குணமுண்டு

அமிழ்தம் அவனது மொழியாகும்

அன்பே அவனது வழியாகும்”

– அன்பே வழியாகக் கொண்ட பெருந்தலைவர் காமராசர் பற்றிக் காண்போம்.

“செயல்வீரர்”, “ஏழைப்பங்காளர்” “படிக்காத மேதை”, “கிங்மேக்கர்” “பெருந்தலைவர்”, “தமிழகத்தின் சிற்பி” எனப் பல பட்டப் பெயர்களைப் பெற்றவர்.

“மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்

எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்– செவ்வி

அருமையும் பாரார் அவமதியும் கொள்ளார்

கருமமே கண்ணா யினார்”

– என்று ஒரு கர்ம வீரனுக்கு இலக்கணம் வகுக்கிறது நீதிநெறி விளக்கம். இவ்விலக்கணத்திற்கு ஓர் இலக்கியமாய், தமிழன்னையின் தவப்புதல்வராய் பாரத் தாயின் பெருமகனாய் தோன்றியவர் காமராசர்.

காமராசர் விருதுநகரில் 1903 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 15 ஆம் நாள் குமாரசாமி, சிவகாமி அம்மையாருக்கு மகனாய் பிறந்தார். ஆறாம் வகுப்பில் பள்ளிக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டார். வியாபாரத்தின் நிமித்தம் போடி நாயக்கனூரிலும், திருவனந்தபுரத்திலும் கடைகளில் இருந்தார்.

பஞ்சாப் படுகொலை நிகழ்ச்சியே காமராசர் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு, கள்ளுக்கடை மறியல் முதலியவற்றில் பங்கேற்றார். தீரர் சத்தியமூர்த்தியுடன் கொண்ட நட்பு குறிப்பிடத்தக்கது. காமராசர் 1954ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் நாள் தமிழகத்தின் முதலமைச்சர் ஆனார். ஒன்பது ஆண்டுகள் பணியாற்றினார்.

" ஏழைகளின் துயரம் நீங்கவே நான் இப்பதவியை ஏற்றுள்ளேன். இல்லையேல் எனக்கு இப்பதவி தேவையில்லை" என்று கூறினார். மனம் கலங்காமல், துணிச்சலுடன், நிதானமாக, பொறுமையுடன் பணிகளைக் கவனித்தார். படாடோபம், முகஸ்துதி, விளம்பரம் ஆகியவற்றை வெறுத்தார்.

எல்லோருக்கும் கல்வியை இலவசமாக தந்தார் காமராசர். 20,000 ஆக இருந்த ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிகை அவர் காலத்தில் 30,000 க்கும் மேலாக உயர்த்தப்பட்டது.

மாணாக்கர்களிடையே ஏற்றத் தாழ்வை நீக்க இலவச சீருடைத்திட்டம், மாணாக்கர்களை உருவாக்கும் ஆசிரியர்களுக்கும் ஓய்வூதியம், பிற்கால சேமிப்பு, ஆயுள் காப்பு ஒப்பந்தம் என மூன்று முத்தான திட்டங்களை செயல்படுத்தினார்.

இவரின் மதிய உணவுத்திட்டம் இலட்சக்கணக்கான குழந்தைகளை பள்ளிக்கு வரச் செய்தது.

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்

ஜகத்தினை அழித்திடுவோம்"

- என்ற பாரதியின் முழக்கம் காற்றில் கரைந்துவிடாது நாட்டில் நிலைத்து நிற்கப் பாடுபட்ட மாமேதை நம் பெருந்தலைவர்.

சிமெண்ட் தொழிற்சாலை, பெரம்பூர் இரயில் பெட்டி தொழிற்சாலை, கிண்டி ரண சிகிச்சைக்கருவி தொழிற்சாலை, சோடா உப்புத் தொழிற்சாலை, நெய்வேலி நிலக்கரித்திட்டம், நீலகரி கச்சா பிலீம் தொழிற்சாலை, மேட்டூர்





காதிக தொழிற்சாலை, சர்க்கரை ஆலைகள் மூலம் தொழில் வளர்ச்சிக்கும் அவரே அடிகோலினார்.

" ஆகட்டும் பார்க்கலாம்" என்ற இரண்டு வினைமுற்றுகளுக்கு பொருள் கண்டவர் அவர்..

புகழுக்கு மயங்காத புத்தன் என்ற வரிக்கேற்ப அரசியல் வானில் நுழைந்த பின்னும் ஆடம்பரம் என்பதறியாது, கதராடையில் உலா வந்த கறைபடாத வெண்ணிலா நம் காமராசர். பூமாலைகளை விரும்பாதவர். தனக்கு அணிவிக்கப்படும் கதராடைகளை " பாலமந்திர்" என்ற சிறுவர் பள்ளிக்கு அனுப்பிவிடுவார்.

" படித்ததினால் அறிவு பெற்றோர்
ஆயிரம் உண்டு

பாடம் படிக்காத மேதைகளும் பாரினில்
உண்டு"

என்ற பாடலுக்கேற்ப மெத்தவும் படிக்காவிட்டாலும், மேதையாக விளங்கியவர் பெருந்தலைவர்.

"தெருக்கள் தோறும் தொடக்கப்பள்ளி,


ஊர் தோறும் உயர்நிலைப்பள்ளி "

என கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டமையால் தான் காமராசர் பிறந்த நன்நாளை "கல்வி வளர்ச்சி நாள்" ஆக தமிழக மக்களான நாம் கொண்டாடி மகிழ்கிறோம்.



**- ம.அமிர்தா தமிழரசன்**

**தேனி**



# தமிழ்மொழி

கனியாகச் சுவைத்திடவே எங்களுக்கு இருக்கும்
கனிவாகப் பேசிடவே கேட்டிடவே நலமே
கலையெனவே மிகுதியாக மிளிர்ந்திடவே இங்கு
கவின்மொழியாய் என்றுமாக உயர்ந்திடவே வளரும்

இனிதெனவே எங்ஙனமே பரவிடுமே நன்றாய்
இயல்பாக மொழிந்திடவே நலம்பயக்கும் என்றும்
இனித்திடுமே இதிகாசம் இலக்கணமும் தருமே!
இனியொன்று எம்மொழியாய் உலகினிலே வருமோ?.

தனியானக் குணத்துடனே ழகரமுமே இருக்க
தளர்விலாது தனித்தரத்தில்  கண்டிடுமே இதுவே
தங்கமான மொழியாக மக்களெலாம் காண.
தரணியெலாம் உயர்வாகப் பார்த்திடவே உயரும்

கனிரசமாய் முப்பாலும் திருக்குறளைத்   தந்து.
கலைகளுக்கும் இப்படித்தான் இலக்கணமும் வகுத்து
கலைக்கூடம் இருக்கவேண்டு மெனச்சொன்ன மொழி
கண்டோரும் சுவைத்தோரும் சொல்வார்கள் வாழ்த்தி!

–முனைவர் **கு. கதிரேசன்**,

திருச்சிராப்பள்ளி

கட்டுரை


# அமெரிக்க மண்ணில் ஒரு உயரிய சந்திப்பு



**த**மிழகத்தில் இருந்து அமெரிக்க மண்ணில் நான் வந்து இறங்கிய பின்னர், இலக்கியப் பசி மனதை அலைக்கழித்தது. உடனே, அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழக வேந்தரும் படைப்பாளருமான தமிழ்மாமணி தாழை.இரா. உதயநேசன் ஐயா அவர்களைச் சந்திக்கும் திட்டம் உருவானது. அதன்படி என் துணைவியாருடன் புறப்பட்டுவிட்டேன். அதனால், கடந்த 17.07.2022 ஞாயிறு, எங்களுக்கு ஓர் இனிய நாள் ஆனது.

உதயநேசன் ஐயா அவர்களை வடஅமெரிக்காவின் இந்தியானா பொலிஸ்சில் உள்ள அவர்களது இல்லத்துக்குச் சென்றோம். உதயநேசன் ஐயா அவர்களும், அவரது துணைவியார் கலையரசி அவர்களும், அவர்கள் குடும்பத்தினரும் மகிழ்வாக வரவேற்றனர். அவரது குடும்பத்தினரின் அன்பான உபசரிப்பை எங்களால் மறக்கமுடியாது.





அவரது அலுவலகத்துக்கும் அழைத்துச் சென்றார் உதயநேசன். அங்கும் பல்வேறு ஆளுமைகளுடம்ன் எங்களது சந்திப்புக்கு பின், எங்களது மகள்–மருமகன் இல்லம் இருக்கும் கான்சாஸ் நகர் நோக்கி எங்களது பயணம் தொடர்ந்தது. அமெரிக்காவிலும் தமிழ் அதிகமாகவே மணம் வீசுகிறது.

அமெரிக்காவில் நான் வெளியிட இருக்கும் கவிதை நூல்களை ஐயாவிடம் கொடுத்து மகிழ்ந்தோம். முத்தமிழ்ப் பல்கலைக்கழகம் குறித்தும், நூல் வெளியீட்டு விழா குறித்தும் உரையாடினோம். பின்பு,



– கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்

# கோலாகல நெய்தல் விழா!

## தூத்துக்குடியைத் தெறிக்கவிட்ட கனிமொழி!



தூத்துக்குடி கடல்சார்ந்த நகரம் என்பதால் 'நெய்தல்' என்ற பெயரில் இந்த கலைவிழாவை அவர் நடத்தி இருக்கிறார்.

ஜெகத்கஸ்பர் உள்ளிட்ட ஆளுமைகளுடன் சேர்ந்து 'சென்னை சங்கமத்தை' முன்னெடுத்த கனிமொழியே, இப்போது தூத்துக்குடியில் 4 நாள் நிகழ்வாக, 'நெய்தல்' கலைவிழாவை நடத்தி, தென்மாவட்ட மக்களை மகிழ்வில் பூரிக்க வைத்திருக்கிறார்.



தமிழ்ப்பண்பாட்டைநாட்டுப்புறக்கலைகள் மூலம் எதிரொலித்த சென்னை சங்கமம் நிகழ்ச்சியை, கடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு அப்படியே தூத்துக்குடியில் 'நெய்தல்' கலைவிழாவாக, கட்சி முத்திரை எதுவும் இன்றி அரங்கேறியிருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினரான கனிமொழி கருணாநிதி.



கடந்த 7 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை 4 நாள் நடந்த நெய்தல் கலைவிழாவில், தமிழகத்தின் தொன்மையான கலை நிகழ்ச்சிகள் பலவும் அரங்கேற்றப்பட்டன.

ஆட்சி மாற்றம் நிகழ்ந்திருக்கும் நிலையில், சென்னை சங்கமம் மீண்டும் நடக்காதா? என்ற எதிர்பார்ப்பு பரவலாக இருந்த சூழலில், ஜுன் இறுதியில் இதற்கான அறிவிப்பை



கனிமொழி வெளியிட்ட நொடியிலேயே எதிர்பார்ப்பு கலந்த பரபரப்பு பற்றிக்கொண்டது.

முதல் நாளின் சிறப்பு நிகழ்வாக கலைமாமணி சின்னப்பொண்ணு குவினரின் இசை நிகழ்ச்சியும், அடுத்தடுத்த நாட்களில் ஐந்திணை குழுவினரின் இசை நிகழ்ச்சி, செந்தில்– ராஜலட்சுமி இசை நிகழ்ச்சி, ஆந்தக்குடி இளையராஜா – கிடாக்குழி மாரியம்மாள் இசை நிகழ்ச்சி என நிகழ்ச்சிகள் வரிசை கட்டி, தூத்துக்குடியை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தின.

ஒயிலாட்டம், தேவராட்டம், கும்மி – கோலாட்டம் போன்ற நிகழ்ச்சிகளோடு, மிகவும் அருகி வரும் துடும்பாட்டம், நெய்தல் நிலத்திற்கே உரிய களியல், கணியான் கூத்து என பழம்பெருமை வாய்ந்த கூத்துக்கலைகளையும் இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்





படுத்தியது நெய்தல். கலைநிகழ்ச்சிகள் மட்டுமல்லாது, பல்வகை உனவு அரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. குறிப்பாக, முத்துநகர் முத்துக்கள் என்று திருநங்கை சகோதரிகளுக்கென சிறப்பாக ஒரு உணவு அரங்கும் அமைக்கப்பட்டிருந்ததோடு, மறுவாழ்வு முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் பண்பாட்டு உணவு வகைகளைப் பந்திவைக்கும் அரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது கூடுதல் கவனத்தையும் அன்பையும் பெற்றது.





தோடர் பழங்குடியினரின் பூத்துக்குழி ஆடை, காணி பழங்குடியினரின் வாழ்வியல் அங்காடி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறை, காயல்பட்டினப் பெண்களால் நடத்தப்படும் அபதி கைவினைக் கலை அங்காடி என கைவினைப் பொருட்களுக்கும் பல அரங்குகள் அங்கே திறக்கப்பட்டிருந்தன. மேலும் அறிவுக்கு விருந்து வைக்கும் புத்தக அரங்கும் அமைக்கப்பட்டிருந்தது.

ஸ்பிக் மற்றும் கிரீன் ஸ்டார் ஆகிய நிறுவனங்களின் உதவியோடும், மாவட்ட நிர்வாகத்தின் உறுதுணையோடும் அரங்கேறியது நெய்தல்.

இந்த நிகழ்ச்சியில் கனிமொழியோடு அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர்கள் மார்க்கண்டேயன், சண்முகையா, மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர்





சாருஸ்ரீ, மாவட்ட கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன், மாவட்ட ஆட்சியர் செந்தில் ராஜ் என ஒரு பெரும் படையே கைகோத்துச் செயல்பட்டதைக் காணமுடிந்தது.

தொன்மையான தமிழ்க்கலை வடிவங்களின் மேன்மையை நிலைநாட்டுவதாக நெய்தல் அமைந்திருந்தது.

இதுபோல் தமிழகம் முழுக்க பண்பாட்டுத் திருவிழாக்கள் நிகழ்த்தப்பட வேண்டியது, காலத்தின் அவசியம்.











# சென்னையைக் கலக்கிய சர்வதேச செஸ் ஒலிம்பியாட் - 2022

தமிழக அரசின் முன்னெடுப்பில் சென்னை அருகே உள்ள பல்லவக் கலை நகரமான மாமல்லபுரத்தில் சர்வதேச அளவில் நடைபெறும் 44ஆவது செஸ் ஒலிம்பியாட் - 2022 போட்டியை 28 ஆம் தேதி பிரதமர் நரேந்திமோடி தொடங்கி வைத்தார். உலகையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கும்





இந்தப் போட்டியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு முன்னெடுத்திருக்கிறது. ஏறத்தாழ 200 நாட்டு செஸ் வீரர்கள் பங்கேற்கும் இந்த பிரமாண்ட நிகழ்வு, தமிழகத்திற்குப் பெரும் பெருமையைத் தேடித்தந்திருக்கிறது.



# சுதந்திரம்

காமாட்சி சத்தம் போட்டு படித்துக் கொண்டிருந்தாள். குமரேசனுக்கு நல்ல தலைவலி... சத்தம் நாரசமாக இருந்தாலும், நேற்று வீட்டில் நடந்த விடயம் அவரை அதிக அழுத்தத்துக்கு ஆக்கியிருந்தாலும்,

மகளின் மழலைக் குழல் கேட்க மனதில் மகிழ்ச்சி பொங்க கவனிக்க துவங்கினார்.

ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி இந்திய நாடு சுதந்திரம் பெற்றது என்ற வார்த்தையை அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தால் காமாட்சி...

“ஏம்மா இந்த ஒரு வார்த்தை மனப்பாடம் பண்ண இவ்வளவு கஷ்டப்படுற.. என்று கொஞ்சம் கண்டிப்பும் பாசமும் கலந்த குரலில் கேட்டார்.

இல்லப்பா ... அது வந்து...

இந்தியா சுதந்திரம் வாங்கியது அப்படின்னு சொல்றாங்களே அது என்னப்பா “காசு கொடுத்து” வாங்கினார்களா? எவ்வளவு காசுப்பா? என மகள் கேட்க, அவருக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை...

பின்பு இதே வயதில் இவருக்கும் இந்த கேள்வி எழுந்தது நினைவுக்கு வர மகளுக்கு பொறுமையாக விளக்க ஆரம்பித்தார்.

இல்லம்மா நம்ம நாட்டை வெள்ளைக்காரன் வந்து ரொம்ப வருடமா நம்ம கிட்ட இருக்கிறத எடுத்துக்கிட்டு நம்மள மிரட்டி ஆட்சி பண்ணிட்டு இருந்தான்.

அப்ப நம்ம நாட்டு தலைவர்கள் மக்கள் எல்லாரும் கோபப்பட்டு நீங்க வேண்டாம் .

நாங்களே எங்களை பார்த்துக்கிறோம் அப்படின்னு பெரிய போராட்டம் பண்ணி, நிறைய பேரு உயிர் தியாகம் பண்ணி, கொஞ்சம் பேரு ரொம்ப கோவமா போராடி,

கொஞ்சம் பேரு ரொம்ப அமைதியா போராடி, இந்த சுதந்திரத்தை நம்ம வாங்கினோம். அதுக்கு காசு எல்லாம் இல்லம்மா நம்மளுடைய உரிமையை நாமளே கேட்டு வாங்கிறது.

அந்த போராட்டம் தான் நாம கொடுத்த "காசு" என தனக்குத் தெரிந்த முறையில், குழந்தைக்கு புரியும் வகையில் விளக்கினார்.

அப்பா... அப்பா... போராட்டம் பண்றது தப்பு இல்லையாப்பா? அது வந்து...

நாம அவங்க சொல்ற பேச்சைக் கேட்காத மாதிரி தானே அர்த்தம் என்ன மகள் வெகுளியாக கேட்க...

நல்ல விஷயத்துக்கு போராடுவது தப்பே கிடையாது என மகளுக்கு போதனை செய்தார் குமரேசன்.

அப்பா, நான் ஒன்னு கேட்டா நீ கோச்சுக்க மாட்ட இல்ல ? என மகள் கேட்க...

மகளுக்கு சுதந்திரத்தைப் பற்றி விளக்கிய மகிழ்ச்சியில், சொல்லுடா செல்லம் அப்பா ஏன்? உன்கிட்ட கோவிச்சுக்க போறேன் என்றார் அன்பாக...

இல்லப்பா ... அக்கா வந்து மேல படிக்கப் போறேன் அப்படின்னு சொன்னப்ப ,நேத்து ஒரே சண்டை போட்டுட்டு இருந்தீங்க..

"இந்த சுதந்திரம் கூட எனக்கு கொடுக்க மாட்டீங்களா? அப்பா, நான் இதுக்காக சாப்பிடாம இருப்பேன் அப்படின்னு அக்கா சொல்லும் போது ,

நீங்களும், அம்மாவும் அக்கா கிட்ட கோச்சிக்கிட்டீங்களே ?

அப்ப அக்கா போராட்டம் ஜெயித்ததா? அக்காவுக்கு சுதந்திரம் கிடைக்காதா? அக்கா மேல் கொண்டு படிக்க நீங்க விட மாட்டீங்களாப்பா?

என கேட்க.. சட்டு என்று சம்பட்டிகள் அடித்தது போல் இருந்தது குமரேசனுக்கு...

அது வந்து... இல்ல செல்லம்

இல்ல செல்லம் ..அக்கா மேல படிச்சா அதுக்கேத்த மாதிரி "மாப்பிள்ளை" உனக்கு சொன்னா புரியாதுமா என சன்னமான குரலில் சொல்ல...

சரிப்பா "இந்தியா சுதந்திரம் வாங்கின மாதிரி அக்காவும் ஒரு நாள் சுதந்திரம் வாங்கிப்பா" அப்ப பாத்துக்கலாம் .

நானு இன்னொரு பாடம் படிக்கணும்ப்பா.. என்ன தொந்தரவு பண்ணாதீங்க என மகள் மீண்டும் படிப்பை தொடர..

தன் மூத்த மகளுக்கு சுதந்திரம் கொடுக்க முடிவு செய்தார் குமரேசன்!



**கீதா ஸ்ரீராம்**
**சென்னை**

# ஆசையின் ஓசை




**அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை இணையத்தில், நிறுவனர் தமிழ்மாமணி தாழை இரா.உதயநேசன் அவர்களின் முன்னெடுப்பின் படி, தமிழ்மணி நகுலா சிவநாதன் அவர்கள் தலைமையில், 'ஆசையின் ஓசை' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட 6 வரிக்கவிதைப் போட்டிக்கு வந்த கவிஞர்கள் சிலரது கவிதைகள் இங்கே....**

ஆசையின் ஓசை வளையலில் தெரியுது
ஆரவாரமாய் அவை நொறுங்கி உடையது
ஆட்சேபனை இல்லாமல் மனங்கள் சேருது
ஆண்டவன் கூட கண்ணை மூடுது!
அணைப்பு கொஞ்சம் இறுகிப் போகுது
அன்பு அங்கு ஆறாய் ஓடுது!

**–கந்தையா தில்லைவிநாயகலிங்கம்,**
**அத்தியடி, யாழ்ப்பாணம்.**

தேவையின் திரட்சியே ஆசைகள் ஆகும்!
ஆழ்மன விருப்பம் அமைதியாய் இருக்கும்!
சூழ்நிலை வாய்க்கையில் சத்தமாய் ஒலிக்கும்!
வாய்விட்டுக் கேட்பதே கிடைப்பது வழக்கம்!
அழுத பிள்ளையே பாலைக் குடிக்கும்!
உரைக்கா ஆசை உயிர்ப்பது இல்லை/

**–முனைவர் 'கண்மணி'–கண்ணன்**

ஆசையின் ஓசையை அம்மாவிடம்
பார்த்தேன்
ஆராரோ பாடுகின்ற தாலாட்டில் கேட்டேன்
பிடிச்சோறு ஊட்டிப் பிள்ளையை
தூங்கவைக்க
மடியில் உறங்கவைத்து மகிழ்ச்சியாக
பாடும்போது
ஊஞ்சலை ஆட்டிவிட்டு உறங்கும்வரை
தாலாட்டி
கொஞ்சலாக விடும்போது குழந்தையின்
சிரிப்போசை..

**– கவிஞர் பட்டிக்குடிக்காடு**
**இரா.கோவிந்தராசு .**



ஆசையின் ஓசை அடுத்தவர் கேட்பதில்லை
அடிமனம் இருந்தே ஆர்ப்பரிக்கும்
ஓய்வதில்லை
மனமதன் எழுச்சி முகமதில் மறைவதில்லை
குணமுள்ள மனிதன் பண்பினை
இழப்பதில்லை
உள்ளத்தின் எண்ணங்கள் ஓசையாய்
ஒலிப்பதில்லை
உண்மை இதுவே உணர்ந்தால்
தோல்வியில்லை!

**–அல்வின் எட்வின் பீரிஸ்,**
**யாழ்ப்பாணம்.**



ஆக்கத்திற்கு அழிவுக்கு ஆசையே காரணம்
ஆசையென்பது மன சஞ்சல ஓசை
எறும்புகளை காகம் உயிருடன் உண்பதும்
இறந்திட்ட காகத்தை எறும்புகள் தின்பதும்!
அலைகடலில் மீன்கள் வலைப்பட நேர்வதும்
தின்றவன் கடல்வாய் இரையாய் ஆவதும்
ஆசையின் விளைவே

**–கருப்பத்தூர் காமேஸ்வரன்**

மனதினில் உதித்திடும் ஆசைகள் பெரிது
அடைந்து பெற்றிடல் இல்லை எளிது
இதயத்தில் இருந்து வேண்டுதல் செய்திடும்
ஓசையும் எழுப்பி நிம்மதி குலைத்திடும்
பக்குவம் கொண்டே வாழ்ந்திடல் சிறப்பு
தேவை தெரிந்தே புரிபடல் பொறுப்பு

**– தஞ்சை பழ வள்ளியப்பன்**

ஆசையின் ஓசை ஆனந்தம் கொள்ளும்..!
நிராசைப் பேராசை நித்தியப் போராட்டம்!
உருமாறும் அடிக்கடி உறங்காது இடமாறும்!
கருவுறும் பெரிதாகும் கலங்காமல் அழுதிடும்!
முற்றும் துறந்திட்ட முனிவனுக்கும் வரும்!
கற்றும் பயனற்றுக் கவலையில் அல்லாடும்!

**– சாக்கை.பொன்னழகு**

ஆசையின் ஓசை ஆர்ப்பாட்டம் செய்யும்
கிடைக்கும் வரையில் போராடிப் பார்க்கும்
சமாதானம் ஆகாது பிடிவாதம் பிடிக்கும்
தேம்பி அழுதிடும் பிள்ளைகள் போன்று
கேட்டதுக் கிடைத்திட முகமது மலரும்
உள்ளம் மகிழ்ந்து புகழ்ந்துப் பேசும்

**– அ. நாராயணசாமி**

இதயத் துடிப்பாய்க் கேட்டிடும் சத்தம்
இயற்கையாய் உணர்வில் ஒட்டிக் கொண்டதே
எதிர்கால இலட்சியமாய்த் துளிர்த்த ஆசைகள்
உழைப்பு நீரினை ஓயாமல் உறிஞ்சிடுதே
நம்பிக்கை எண்ணம் வாழ்வியல் ஓட்டத்தினை
உற்சாகமாக மாற்றிட உத்வேகம் தந்திடுதே

**–மா.பாலசுந்தரம்**

ஆசையின் ஓசை கேட்க வில்லையோ
மாசற்ற நெஞ்சைப் புரிந்து கொள்ளாயோ
வாசம் கொண்ட ரோசா உன்மேல்
பாசம் வைத்துப் பயித்தியம் ஆனேன்
பேசும் வார்த்தை புரிந்திடு மயிலே
நேசம் என்னில் காட்டிடு மானே

**– செபா சவிரிமுத்து**

ஆசையின் ஓசை அடிமனதில் எழும்
அடுத்தவர் அறியாமல் மனம் போராடும்
கிடைக்கும் வரைக்கும் சமாதானம் அடையாது
மனத்திற்குள் மறுகி மௌனமாய்ப் புழுங்கும்
ஆற்றாமை கொண்டு வாய்விட்டுக் கேட்கும்
கைவசம் சேர்ந்தால் என்றுமே குதூகலம்

**–புவனா சற்குணம்,**
**கனடா.**

ஆசையின் ஓசை அன்பின் இசை
கால உணர்வின் ஓட்ட விகிதம்
பண்பின் பண் தேடும் சகிதம்
அளவாய் உயிரும் எழுதும் தருணம்
ஏமாற்றும் செயலின் நடப்பு
மனம் தீராத தன்மையின் கிடப்பு

**–தலதாசன் ராஜலிங்கம்.**

மானுடத்தின் வளர்ச்சிகள்
ஆசையின் நீட்சிகளே!
மாற்றங்கள் அனைத்திலும்
ஆவல்களே அடித்தளம்!
மெருகேறும் உழைப்பிலே
உழைப்பின்றி உயர்வில்லை!

**– சென்னிமலை அ.சீனிவாசன்**



ஆசையின் ஓசை என்பார் அவனியில்
ஆவதெல்லாம் தன்னாலே தானென்பார்
கேளீர்!
மீசை முளைத்தாலும் மேதினியில்
யாவர்க்கும்
ஆசை மட்டும் அழிவதில்லை சொல்வேன்!
காசினியில் கள்ளமில்லா வாழ்வு தானே
காலமெல்லாம் பேர்சொல்லும் கன்னியரே
அறிவீர்!

**– வ.க.கன்னியப்பன்**

மிநப்பாசை கொண்டதனால் இராவணன்
அழிந்தான்
தப்பாசை கொண்டவர்கள் யாவருமே அழிவர்
ஆசையற்ற மனம் வேண்டுதலும் ஓராசையே
ஆசைக்கு இசைதல் தவறொன்றும் இல்லை
ஆசையற்றுப் போய்விட்டால்
மனிதனுக்கு தொல்லை.

**–இரமணி ராஜன்,**
**சென்னை.**

மினுமினுக்கும் விழிகளினால்
மீட்டுகின்ற ஆசைகளை
முணுமுணுக்கும் மொழிவழியே
முன்வைக்கும் ஓசையது...
சிளுசிளுக்கும் மலைக்காற்றில்
சினுங்குகின்ற அருவிகளில்
கிளுகிளுப்பாய் ஒலிக்கின்ற
கெஞ்சலான இசையுமது...

**–ஆ.முருகானந்தம்,**
**திருச்சிராப்பள்ளி.**

ஆசையின் ஓட்டம் அடிக்கடி மாறும்
இதயம் தேடியது இதமான சுகத்தை
உணர்வின் உரிமையில் உறவுகள் மகிழும்
உண்மை உணர்ந்து ஓடுது தொலைவில்.
நித்தம் சத்தம் மதுவின் முத்தம்
விடியலை நாடாக மாதுடன் மயக்கம்

**– வீரகனூர் ஆ இரவிச்சந்திரன்**
**சேலம்**

ஆசையின் ஓசை அடங்கிக் கிடக்கும்
இதயத்தில் இருந்து இலகுவாய்த் துடிக்கும்
நேரம் வருகையில் தீர்த்திட நினைக்கும்
தீரா ஆசைகள் நிராசையாய் மாறும்
ஆசைப் படப்பட அடரும் துன்பமே
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்

**–கே.கோவிந்தன்**
**வாலாஜா**

ஆசையின் ஓசை ஆசையின் ஓசை
அகத்தில் ஒலிக்கும் புறத்தில் ஒலிக்க
அதுவும் மறுக்கும் கிடைக்கும் வரை
உனை நச்சரிக்கும் கிடைக்கா விட்டால்
என எச்சரிக்கும் அளவோடு இருந்தால்
வாழ்வு சிறக்கும் அளவுக்கு மீறினால்
அதுவே கசக்கும்

**– கவிரதன்,**
**மதுரை**



ஆசையின் ஓசைகள் அலைகடல் போல
ஆட்டிப் படைக்கும் வல்லமை கொண்டே
ஆயுள் முழுதும் ஒலித்திடும் பின்னே
ஆசையில் வாழ்ந்தவர் வீழ்ந்தவர் ஆவார்
பணத்தில் பதவியில் பண்பை மறத்தல்
மக்களை எல்லாம் மாக்கள் ஆக்குமே.

**– ஜே.குணசுந்தரி.**

ஆசையின் ஓசையது அடங்காத தாகமது
காலைத் தேநீருக்கும் ருசியான உணவிற்கும்
இளம் வயதிலோ தீராக் காதலுக்கு
ஆண்டுகள் மாறினும் அப்பருவ விருப்பங்கள்
நிராசைகளாய் நீண்ட பட்டியல் ஆனாலும்
ஓயாக் கடலாக உள்ளம் நச்சரிக்குமே .

**– தனம் மீனாட்சிநாதன்**

ஆசையின் ஓசை
ஒலித்தபடிதான் இருக்கிறது
கண்டுகொள்ளக் கணமின்றிக்
குவலயம் சுழல்கிறது
அவலமெல்லாம் தாண்டி
அடிமனத்தில் ஒளிந்திருக்கும்
இடத்திற்கு இடம்
மாறுபாடுகள் மலர்ந்தபடி

**– ஆ–முருகேசுவரி**



மழலையில் நிலவைப் பிடித்திட ஆவல்
விடலையில் பூமியில் விளைவது தேடல்.
இளமையில் கல்வியை வெற்றிட ஓடல்
காளையாய் குமரியைக் கவர்ந்திடப் பாடல்
ஆவலில் திரவியம் சேர்த்திட ஆவல்
அறுபதில் பக்தியுடன் மாறுதல் ஓதலே.

**– மீரான் இப்றாகீம்**

ஆசையின் ஓசை அடங்காப் பாசை
இளமையில் தேடல் இனிமைக் காலம்
பருவத்தில் நாடல் பாங்காய் திகட்டும்
முதுமையில் நாட்டம் முன்னோருக்கு
ஞானம்.

**– பெ.லோகேஸ்வரன்**

ஆசை ஓசையின் ஆழம் தெரியாது
அதன்மேல் பயணம் செய்யவு முடியாது
நேரத்திற்கு நேரம் இரைச்சல் கொடுக்கும்
நெஞ்சினில் என்றும் சுமையாக இருக்கும்
ஆற்றல் இருந்தால் கரையும் தெரியும்.

**– எம்.எச்.எம்.மன்சூர்,
கல்முனை**

சின்னச் சிறகுகளை செல்லமாய் விரித்து
வண்ணக் கனவுகளை வகையாகச் சுமந்து
விண்ணை முட்டிடவே விரைவாகப்
பறந்திடவே
வானவில் தோரண வண்ணங்கள்
வாங்கிடவே
என்னாசையின் ஓசை இதுவன்றோ
இறைவா.

**– ஏரூர் ஆஸாத் கமால்**

கவிஞர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.



# உலகத் தமிழர்களே!

கலை – இலக்கியம் – சமூகவியல் – நாட்டுப்புறவியல்
உள்ளிட்ட
இணைய வழிப் படிப்புகளில்
இணைய வாருங்கள்!

உலக அரங்கில்
தனியாய் ஒரு
உன்னத உலகம்!

தமிழே நமது உயிர் மொழி!– அது
தமிழரின் உயர்வுக்கு ஒரே வழி!

## அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்

விபரங்களுக்கு:
www.americamutamiluniversity.org

பார்த்துக்கொண்டே இருக்காதே
ஒரு பார்வையில்
என்னைச் சமை

சமைத்துக்கொண்டே இருக்காதே
ஒரு சிரிப்பில்
என்னைப் பரிமாறு

பரிமாறிக்கொண்டே இருக்காதே
ஒரு முத்தத்தில்
என்னைச் சுவைத்துவிடு

சுவைத்துக்கொண்டே இருக்காதே
ஓர் இறுக்கத்தில்
என்னைச் செரித்துவிடு

– பாடலாசிரியர் **பழநிபாரதி**

